# போதனை மற்றும் பிரசங்கம் ஆகியவற்றில் உதவிகள்

ஜான் கச்செல்மேன்

## *“அவனுடைய பெயர் எல்க்கானா”*
## *(1 சாமுவேல் 1:1)*

*பழங்கால எபிரெயர்களுக்கு, ஒருவரின் பெயர் என்பது குறிப்பிடத்தக்கதாக இருந்தது. “எல்க்கானா” என்பது “தேவன் உடைமையாகக் கொண்டுள்ளார்” என்று நேரடியாக அர்த்தம் தருவதாயிருந்தது. இந்தப் பெயரானது இம்மனிதருக்கு எவ்வளவாகப் பொருந்தியுள்ளது.*

1. *அவருடைய நபர்த்துவத்தைத் தேவன் உடைமையாகக் கொண்டிருந்தார். அவர் தாம் முற்றிலுமாகத் தேவனைப் பற்றிய சிந்தை கொண்டிருந்ததாகச் சுட்டிக் காண்பித்தார். எவரொருவரும் அவரை உற்று நோக்குதல் மட்டுமே அவசியமாயிருந்தது, இது மிகவும் தெளிவாகின்றது.*
2. *அவருடைய பெற்றோர்த்துவத்தைத் தேவன் உடைமையாகக் கொண்டிருந்தார். அவர் தமது பிள்ளைகளைப் பயிற்றுவிக்கவும், தம்முடையது போன்ற விசுவாசம் மற்றும் கடமை ஆகியவற்றை அவர்களின் இருதயங்களில் பதித்து வைக்கவும் கவனமாயிருந்தார்.*
3. *அவருடைய திருமணத்தைத் தேவன் உடைமையாகக் கொண்டிருந்தார். அன்னாளுடனான அவரது உறவு இரக்கமுள்ளதாக, நேர்மையுள்ளதாக, புரிந்து கொள்ளுதல் உடையதாக, அக்கறை உடையதாக மற்றும் அன்பு செலுத்துவதாக இருந்தது.*

## வெளிப்படுத்தப்பட்ட ஒப்புக் கொடுத்தல்
## *(1 சாமுவேல் 1:3)*

*தேவனுக்கான எல்க்கானாவின் ஒப்புக் கொடுத்தலானது அவரது மார்க்கரீதியான செயல்முறைகளில் மட்டுமின்றி அன்றாடப் பழக்க வழக்கங்களிலும் கூட வெளிப்படுத்தப்பட்டது. இம்மனிதரின் ஒப்புக் கொடுத்தலானது பின்வருபவற்றினால் வெளிப்படுத்தப்பட்டது ...*

1. *அவருடைய முறையான, சீரான, உணர்வுப்பூர்வமான மற்றும் அறிவுப்பூர்வமான மார்க்கரீதியான செயல்முறைகளினால் (1:3, 4, 21).*
2. *பிள்ளைகளைத் தேவனுடைய வழிகளில் போதித்துப் பயிற்றுவிப்பதற்கான அவரது அளவு கடந்த அக்கறையினால் (1:4, 21).*
3. *அன்னாள் மீது அவர் கொண்டிருந்த ஆழமான அன்பு மற்றும் பிரியத்தினால் (1:8).*
4. *புண்பட்டவர்களுக்காக அவர் கொண்டிருந்த நுண்ணுணர்வு, கவனிப்பு மற்றும் அக்கறை (1:8).*

*இந்தப் பண்புகள் யாவும், வாரத்தின் ஏழு நாட்களிலும் தேவனுக்கு உண்மையாகத் தன்னை ஒப்புக் கொடுத்து வாழும் பண்புடைய ஒருவரைக் குறிக்கின்றன. இவ்விதமாக, “கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்” (1 பேது. 3:15) என்று பரிசுத்தவான்கள் யாவரையும் வற்புறுத்த வேண்டிய அவசியமாயுள்ளது.*

## குடும்ப ஆராதனை
## *(1 சாமுவேல் 1:4)*

*இந்தப் பழங்காலக் குடும்பத்தில் இருந்து, குடும்பங்கள் தங்களின் ஆராதனை செயல்பாடுகளில் ஒன்றுபட்டிருக்க வேண்டியதின் அவசியத்தை உற்று நோக்க முடியும்.*

1. *குடும்ப ஆராதனையின் தொடக்க இடத்தைக் கவனியுங்கள் - "எல்க்கானா பலியிட்டான்." பெற்றோர்கள் உலகக் குறிக்கோள்கள் தங்களை விட்டு அகலும்படி செய்து, தேவபக்திக் கேற்றவைகளை நாட வேண்டும்.*
2. *அவசியமான பயிற்சியைக் கவனியுங்கள் - "பங்கு போட்டுக் கொடுப்பான்." பிள்ளைகளுக்கு அறிவுறுத்துதல் அவசியமாகின்றது, இதை அளிப்பதற்குப் பெற்றோருக்குக் கடமை உண்டு.*
3. *அளவெல்லையைக் கவனியுங்கள் - ''எல்லாருக்கும்.'' சிறுவர் முதல் வயதானவர்கள் வரை எல்லாப் பிள்ளைகளும் இந்தப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். எவரொருவரும் விலக்கி வைக்கப் படக் கூடாது, ஏனெனில் "எல்லாரும்" பங்கேற்க முடியும்.*

## "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்!"
## *(1 சாமுவேல் 1:5)*

*மனைவியர்கள் தங்கள் கணவர்கள் மீது அன்புகூர வேண்டும் என்று வேதாகமத்தில் எவ்விடத்திலும் கட்டளையிடப்படவில்லை, ஆனால் கணவர்கள் தங்கள் மனைவியர்கள் மீது அன்புகூர வேண்டும் என்று அது கட்டளையிடுகின்றது (எபே. 5:25, 28). ஏன்? ஏனென்றால் மனைவியின் அன்பு என்பது பதிலுக்குப் பதிலாகக் காட்டப்படுவதாக உள்ளது. அவள் தன் கணவன் தன் மீது காண்பிக்கிற விதமாக (பதிலுக்கு) அன்பு செலுத்துகின்றாள்! ஒரு கணவன் தன் மனைவியின் மீது எவ்வாறு அன்பு செலுத்த வேண்டும் என்பதை நாம் எல்க்கானா விடமிருந்து கற்றுக் கொள்ளுகின்றோம்.*

1. *அவள் மீது பெருந்தன்மையுடன் அன்புகூருங்கள் (1:5).*
2. *அவள் மீது காணக்கூடிய வகையில் அன்புகூருங்கள் (1:5).*
3. *அவள் எரிச்சலாயிருக்கும் பொழுது(ம்) அன்புகூருங்கள் (1:6).*
4. *அவள் மனச்சோர்வடைந்துள்ள வேளையிலும், உணர்வெழுச்சி யடைந்துள்ள வேளையிலும் அன்புகூருங்கள் (1:7, 8).*
5. *அவள் எரிச்சல் மூட்டக் கூடியதாகக் காணப்படக் கூடிய எதையாவது செய்கின்ற வேளையிலும் அன்புகூருங்கள் (1:8).*

## எல்க்கானா அன்னாளை நேசித்தார்
## *(1 சாமுவேல் 1:5)*

1. *அவருடைய அன்பு செயல்விளக்கப்படுத்தப்பட்டது (1:5).*
2. *அவருடைய அன்பு அவளுடைய சோதனை வேளையில் பலத்திற்கான ஆதார மூலமாயிருந்தது (1:5, 6).*
3. *அவருடைய அன்பு வாய்மொழியில் உரைக்கப்பட்டது (1:8).*
4. *அவருடைய அன்பு அவரது மனைவியின் திட்டங்கள் அவரது திட்டங்களுக்குப் பொருந்தி வராத பொழுது, அவளை "கவனித்துக் கேட்க"*

அவருக்குப் பெலன் அளித்தது (1:22).

5. அவருடைய அன்பு அவரது மனைவியுடன் ஒத்துழைப்பை ஊடுருவிற்று (1:23).

## தேவன் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டார் (1 சாமுவேல் 1:5, 6)

அன்னாள் மலடியாயிருந்த ஆண்டுகள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டன. அதில் நோக்கம் இருந்தது, ஆனால் அந்த நோக்கம் உணர்ந்தறியப்படவில்லை. தேவன் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டார். தேவனுடைய வழிகள் நமது வழிகளாயிருப்ப தில்லை, அவற்றை நாம் பெரும்பாலும் புரிந்து கொள்வதில்லை (ஏசா. 55:9).

1. சில வேளைகளில் தேவன் தண்டியாமல் இருக்கின்ற பொழுது, அவர் தண்டிக்கின்றவராக இருக்கிறார் என்று தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றார்.
2. சில வேளைகளில் தேவன் பட்சபாதமாயிராத நிலையில், அவர் பட்சபாதமாயிருக்கிறார் என்று தவறாகப் புரிந்து கொள்ளப் படுகின்றார்.
3. சில வேளைகளில் தேவன் பிரசன்னமாகியுள்ள நிலையில், அவர் பிரசன்னமாயிருப்பதில்லை என்று தவறாகப் புரிந்து கொள்ளப் படுகின்றார் (1:11).
4. சில வேளைகளில் மக்கள், பாவம் நிறைந்த தங்களின் செயல் முறைகளை நியாயப்படுத்துவதற்காக தேவனைப் பற்றிய தங்களின் தவறான புரிந்து கொள்ளுதல்களைப் பயன்படுத்து கின்றனர், அவர்கள் ''இது என் வாழ்வுக்குத் தேவனுடைய சித்தமாய் இருக்க வேண்டும்'' என்று கூறுகின்றனர்.

சுருக்கமாய்க் கூறுவதென்றால், சில வேளைகளில் தேவன் உண்மையில் தவறாகப் புரிந்து கொள்ளப்படும் பொழுது அவர் குற்றப்படுத்தப்படுகின்றார். தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல் ஒருமுறை திருத்தப்பட்டு விட்டால், எல்லாம் தெளிவாகி விடுகின்றது. அன்னாள் ஏங்கிக் கேட்டுக் கொண்டிருந்த மகன், அவள் அவனைக் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கத் தயாராகும் வரையிலும் அவளுக்குத் தரப்படவில்லை. நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும், ஏனெனில் தேவனைப் பற்றி தவறாகப் புரிந்து கொள்ளு தல் வேதனை, வருத்தம், மற்றும் விசுவாசக் குறைவு ஆகியவற்றிற்குக் காரணமாகிவிடும்! சோதனை அல்லது பரீட்சை என்பது எங்கெல் லாம் இருக்கின்றதோ, அங்கெல்லாம், தேவனை நாம் தவறாகப் புரிந்து கொள்ளாதிருக்கக் கடவோம்! (யோபு 9:1-12; 5:8; 13:15).

## மனத்துயருக்குப் பொதுவான காரணங்கள் (1 சாமுவேல் 1:7)

அன்னாள் மன உற்சாகமின்மையின் ஆழங்களில் இருந்தாள்; அவள் மனச் சோர்வுற்றிருந்தாள் (1:8ஆ, 15, 10). அவள் வாழ்வில் இந்த மனத்துயருக்குக் காரணமாயிருந்தது எது?

1. எரிச்சல் மூட்டும் ஒரு நபர், பெனின்னாள் (1:7).
2. பிள்ளை பெற முடியாததினால் அவள் முற்றிலும் தோல்வி என்ற உணர்வுகள் (1:2, 5, 6; இ.வ. 1:16).

3. தேவனுடைய சித்தத்தைப் புரிந்து கொள்வதில் குறைபாடு (1:5ஆ, 6ஆ, 11).
4. அவள் உணவு உண்ண மறுத்த போது உடல்ரீதியாக அவளைக் கவனித்தலில் குறைபாடு (1:7ஆ).

ஆனால் அன்னாள் தன்னை உண்மையாகவே கவனித்த அன்பு நிறைந்த கணவரின் வார்த்தைகளைக் கவனித்ததால், பேரச்சமூட்டும் ஆழங்களில் இருந்து எழும்பினாள் (1:8). அவள் "எழுந்து", சுறுசுறுப்பாகி, உணவு உண்டு தன்னை போஷித்துக் கொண்டாள் (1:9). அவள் கர்த்தரிடத்தில் பலமாக ஜெபித்தாள் (1:10). அவள் தனது பிரச்சனையைக் கர்த்தரிடமாய்த் திருப்பி விட்டாள். அது அவளுக்கு மிகப் பெரிதாக இருந்தது, அவள் அதை, தானே தீர்த்துக் கொள்ள முயற்சி செய்வதை நிறுத்தி விட்டாள். ஏனெனில், தேவன் மேல் நம்பிக்கை கொண்டு, அன்றாட வாழ்வில் மனத்துயரையும் வீழ்ச்சியையும் வெற்றி கொள்ள வல்லவர்களாய் இருப்பவர்களுக்கு மகிமையுள்ள முடிவொன்று காத்திருக்கின்றது (2:20, 21).

## அமைதிக்கான சாலை வரைபடம்
## (1 சாமுவேல் 1:9-18)

அன்னாள் மிகவும் துக்கமுள்ளவளாயிருந்தாள். அவள் இருதயம் கவலையாயிருந்தது (1:8); அவள் மிகவும் துயரமடைந்திருந்தாள் (1:10); அவளது ஆவி ஒடுங்கிக் கிடந்தது (1:15). அவள் போராடிக் கொண்டிருந்தாள். ஆனாலும் அவள் உயிர் பிழைத்திருந்தாள்! அவள் அடர்ந்த இருளினூடாகக் கடந்து பகலின் வெளிச்சத்திலேயே சென்றாள்! இது எவ்வாறு நடந்தது?

1. அவள் ஆராதிக்கச் சென்றாள் (1:9).
2. அவள் தேவனிடத்தில் வலிவான மற்றும் ஊக்கமான வகையில் ஜெபித்தாள் (1:10, 15).
3. "தனது கவலைகளையெல்லாம் அவரிடமாய் வைக்கையில்" (1:11) தேவனுடைய ஆசீர்வாதத்தை நாடினாள்.
4. அவள் சிலவற்றைச் செய்வதற்கான தனிப்பட்ட பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டாள் (1:11).
5. அவள் தன் வருத்தங்கள், தேவைகள் பற்றி பிறரிடம் திறந்த மனத்துடன் இருந்தாள் (1:14-16).
6. அவள் தனது சுமைகளை இலவாக்கிக் கொண்டாள், "அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை" (1:18; இ.வ. எரே. 31:13ஆ).

## எச்சரிக்கையூட்டும் நடைமுறை
## (1 சாமுவேல் 1:12-18)

கலக்கம் கொண்டிருந்த அன்னாள், ஆசரிப்புக் கூடாரத்தின் இராஜரீகமான சூழலில் தனது இருதயத்தைத் தேவனிடம் ஊற்றினாள். அவளது வெளியரங்கமான நடத்தையைக் கவனித்த ஏலி அவள் தவறான நடக்கையுடையவள் என்று முடிவு செய்தார். அவரது (இந்தத்) தவறானது இன்றைய நாட்களில் பலரால் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. எல்லா உண்மைகளையும் அறிந்து கொள்வதற்கு முன்பு ஒரு நபரைப் பற்றி முடிவெடுத்தல் என்பது எச்சரிக்கையூட்டும் ஒரு நடைமுறையாக உள்ளது.

1. எல்லாம் தவறானது என்ற முடிவுக்கு ஒருவர் விரைந்து செல்லலாம் (1:14).
2. பாரப்பட்டுக் கிடக்கின்ற இருதயத்திற்கு ஒருவர் இன்னும் சற்று

*துன்பத்தைக் கூட்டிச் சேர்த்து விடலாம். அன்னாள் ஏற்கனவே தன்னைத் தோல்வியடைந்தவளாகக் கருதிக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் தன்னைத் "தகுதியற்றவள்" (1:16) என்று உணரும்படியாக்கப்பட்டாள்.*

3. *ஒருவர் ஆராய்ந்து பார்க்கலாம்ஹீஅன்னாளின் பண்பு குறித்து அனாவசியமாகக் கேள்வி கேட்கக் காரணமாயிற்று (1:16).*
4. *ஒருவர், இருதயத்தில் உற்றுப் பார்க்கும் முயற்சியை மேற் கொள்ளாமல் தவறி விடலாம் (1:15).*
5. *ஒருவர் உணர்வறிவற்ற, கொடுமையான, அவசரமான மற்றும் உணர்வற்ற நிலைப்பாடுகளை வெளிப்படுத்தலாம்.*

*ஏலி எவ்வளவாய்த் தவறுள்ளவராயிருந்தாரோ, அவ்வளவாய் அவர் தனது தவறை உணர்ந்த பொழுது மாற்றம் அடைந்தார். அவர் அன்னாளுக்கு உதவ முன் வந்து அவளை உற்சாகப்படுத்தினார் (1:17, 18). அவர் ஒரு வலிவான பாடத்தைக் கற்றுக் கொண்டார்!*

## *"கர்த்தர் (அவளை) நினைத்தருளினார்" (1 சாமுவேல் 1:19)*

*அன்னாளின் வலிவார்ந்த கூக்குரல் (1:11) ஒரு சுருக்கமான எடுத்துரைப்பில் பதில் அளிக்கப்பட்டது. அவளைத் தேவன் நினைவு கூர்ந்தது ஏன்? அவளது விசுவாசம், ஜெபம், வருத்தம், இடர்ப் பாடுகள் ஆகியவற்றினாலேயே அவளை அவர் நினைவுகூர்ந்தார். இதில் உள்ள ஆறுதல் என்ன?*

1. *போராட்டங்களின் மத்தியில், தேவன் நம்மை நினைவுகூர்ந்து நமது தேவைகளை திருப்திப்படுத்துவார் (ரோமர் 8:28; 1 கொரி. 10:13; சங். 34:15-20).*
2. *நாம் புறக்கணிக்கப்படுவதாக தோன்றுகின்ற போது, தேவன் நம்மை மீட்பார் (நீதி. 11:8).*
3. *மனிதர் பெரும்பாலும் மறந்து விடலாம், அவ்வாறே மறக்கின்றனர், ஆனால் தேவன் நம்மை மறக்க மாட்டார் (சங். 37:28).*

*உபா. 4:31; ஆதி. 19:29; சங். 50:15 ஆகிய வேதவசனங்களை வாசியுங்கள். தேவனுடைய ஞாபகசக்தி எவ்வளவு பெரியதாக உள்ளதோ, அவ்வளவுக்கு "இனியும் நினைவுகூராத" திறனும் அவரிடத்தில் உள்ளது (எரே. 31:34; எபி. 8:12; 10:17).*

## *"கர்த்தர் கொடுத்தார்!" (1 சாமுவேல் 1:27)*

*இந்தச் சொற்றொடர் ஆவிக்குரிய வகையில் எவ்வளவு ஆழம் உடையதாயிருக்கிறது! இது அன்னாளின் இருதயம் பற்றிய மாபெரும் வெளிப்பாடாக உள்ளது.*

1. *இது நம்மை நிலைநிறுத்துவதற்குத் தேவன் மீது நம்பிக்கையையும் அவரைச் சார்ந்திருத்தலையும் வெளிப்படுத்துகிறது. தேவன் (நமக்குத் தேவையானவற்றை) அளிப்பார்!*
2. *இது தேவைகளையும் விருப்பங்களையும் விளக்குகின்ற ஒரு இருதயத்தை வெளிப்படுத்துகின்றது. தேவன் கேட்டு பதில் அளிப்பார்!*
3. *இது மனிதத் திறனில் நம்பிக்கையில்லாமையை வெளிப் படுத்துகின்றது. மனிதரால் கூடாதது தேவனால் கூடும்!*

4. இது மாபெரும் கொடுப்பாளரான தேவனைப் புரிந்து கொள்கின்ற ஒருவரை வெளிப்படுத்துகின்றது. தேவன் கொடுக்க விரும்புகின்றார்!

## ஜெபத்தில் பலத்த உறுதிப்பாடு
## (1 சாமுவேல் 1:27)

நாம் தேவனிடத்தில் ஜெபிக்கையில் தைரியமாய் இருக்க முடியும்! தேவன் நமது ஜெபங்களைக் கேட்கின்றார், அவற்றிற்குப் பதில் அளிப்பார் (எபே. 3:20; எபி. 4:16). அன்னாள் தனது ஜெபங்களில் அப்படிப்பட்ட பலத்த உறுதிப்பாடு கொண்டிருந்தது ஏன்?

1. அவள் தனது கலக்கங்கள் பற்றி தேவன் அக்கறை செலுத்தினார் என்று அறிந்தாள் (1:10).
2. அவள் தனது இருதயம் பரிசுத்தப்படுத்தப்பட்டு, நேர்மையாக மற்றும் தேவனுக்குத் திறந்ததாக இருந்தது என்று அறிந்தாள் (1:15).
3. அவள் தனது உண்மையான ஜெபத்தினால் விளைந்த உள்ளான மகிழ்வையும் சமாதானத்தையும் அறிந்தாள் (1:18).
4. அவள் தேவனுடைய அளிப்புகளின் மீது நம்பிக்கை கொள்ளவும் அவற்றின்படி செயல்படவும் முடிவெடுத்தாள் (1:11, 12, 22).
5. அவள் ஜெபத்தின் வலிவின் மீது உறுதிப்பாடுகளும், நம்பிக்கையும், விசுவாசமும் தீர்மானமும் கொண்டவளா யிருந்தாள்.
6. ஜெபத்தால் அவளது உறுதிப்பாடானது, ஜெபங்கள் பதில் அளிக்கப்பட்ட பொழுது அவளுடைய நன்றி செலுத்துதலினால் பலப்படுத்தப்பட்டன. தேவன் கொடுத்த பொழுது அவள் மௌனமாய் இருந்து விடவில்லை!

## வெற்றிகரமான பெற்றோர்த்துவம்
## (1 சாமுவேல் 1:28)

தவறு செய்கின்ற ஒரு பிள்ளையை வளர்க்கின்ற பெற்றோரின் பெருந்துக்கத்தை எடுத்துரைக்க வார்த்தைகள் எதுவும் போதுமான தாக இருக்க முடியாது. பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோருக்கு உத்தரவாதம் தரக் கூடிய மிகச் சிறப்பான திட்டம் என்று எதுவும் இல்லாத நிலையில், பெற்றோர்கள் பின்வரும் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளனர்.

1. ஒவ்வொரு பிள்ளையும் தேவனிடமிருந்து வருகின்ற கொடையாக இருப்பதினால், பெற்றோர்த்துவக் கடமைகளின் மாபெரும் தன்மை குறித்து உணர்ந்தறியுங்கள்! (1:27).
2. இளைய மற்றும் மென்மையான இருதயங்களில் ஆவிக்குரிய கொள்கைகளை நிலைநாட்டுவதின் முக்கியத்துவம் யாவற்றையும் உணர்ந்தறியுங்கள் (1:24).
3. ஒவ்வொரு பிள்ளையையும் கர்த்தருக்கு "அர்ப்பணிப்பதற்கு" நேரமும் சக்தியும் எடுத்துக் கொள்ளுங்கள் (1:28).
4. நீண்ட உழைப்புக்களில் தேவனுக்கு ஊழியம் செய்யும் கடமையை இளையவர்களின் மனதில் பதியச் செய்யுங்கள் (1:28).

பெற்றோர்கள், தாங்கள் அறிந்தவற்றை மட்டுமே போதிக்க முடியும். அவர்கள் தாங்கள் கொண்டுள்ள எண்ணப்போக்குகளை மட்டுமே செயல்விளக்கப் படுத்தவும், தாங்கள் எந்த அளவுக்குத் தேவனிடம் பயபக்தியாய்

இருக்கின்றார்களோ அந்த அளவுக்கே தேவனிடத்திலான மதிப்பை (தங்கள் பிள்ளைகளிடத்தில்) பதிய வைக்கவும் முடியும். இவ்விதமாக, பெற்றோர்கள் தங்கள் வாழ்வானது வார்த்தையிலும் உதாரணத்திலும் தேவபக்தியுள்ளதாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## எரோகாமின் புத்திரனான எல்க்கானா (1 சாமுவேல் 1:1-28)

1. ஒப்புக்கொடுத்தல் உள்ள பக்தியுள்ள மனிதர் (1:3-6, 21).
2. தமது பிள்ளைகளின் மதரீதியான மேம்பாட்டில் ஆர்வம் கொண்டிருந்த தந்தை (1:4, 22, 23).
3. திருமணம் குறித்த தேவனுடைய விதிகளை மீறியதால் இல்லத்தில் பிரிவினையைக் கண்டறிந்த கணவர் (1:2, 6).
4. தேவனிடம் தமது வார்த்தையைக் காத்துக் கொள்ளத் தீர்மானித்த ஒரு மனிதர் (1:21).
5. தமது மனைவியின் மீதான அன்பையும் ஒப்புக் கொடுத்தலையும், வார்த்தை மற்றும் செய்கை ஆகியவற்றில் செயல்விளக்கப்படுத்திய ஒரு மனிதர் (1:8).

## ஒரு தந்தையை மதிக்கத் தக்கவராக்குவது எது (1 சாமுவேல் 1:1-28)

1. தேவன் மீதான மதிப்பு மற்றும் பயபக்தி (1:3).
2. முறையான, வழக்கமான ஆவிக்குரிய பண்பு (1:3).
3. குடும்பத்திற்குப் பயபக்தியைச் செயல்விளக்கப்படுத்துதல் (1:4, 21).
4. தமது மனைவி மீதான அன்பைக் காணக்கூடிய வகையில் செயல்விளக்கப்படுத்துதல் (1:5, 8).
5. தமது மனைவியுடன் ஒத்துழைத்தல் மற்றும் செய்தித் தொடர்பு கொள்ளுதல் (1:23).
6. தேவனுடைய வார்த்தையின் மீது வெளிப்படையான நம்பிக்கை (1:23ஆ).
7. தமது பிள்ளைகளைத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்க மனப் பூர்வமான விருப்பம் (1:28).

## இன்றைய நாட்களின் மனிதர்களுக்கான மூன்று முன்னு ரிமைகள் (1 சாமுவேல் 1:1-28)

1. தேவன் மீது நம்பிக்கை கொண்ட, தேவனை ஆராதிக்கின்ற, தேவனிடத்தில் (கொடுத்த) வாக்கைக் காத்துக் கொள்கின்ற மனிதராயிருங்கள்.
2. வார்த்தை மற்றும் செய்கையினால் உங்கள் மனைவியை ஊக்கப்படுத்துகின்ற ஒரு கணவராயிருங்கள் (1:5, 8).
3. பிள்ளைகளுக்குள் மார்க்கரீதியான வைராக்கியத்தையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தந்தையாயிருங்கள் (1:4, 21, 28).

## *ஒரு தாயின் பல்வேறு முகங்கள்*
## *(1 சாமுவேல் 1:1-2:19)*

1. *அவள் தான் கட்டுப்படுத்த வல்லமையற்றுள்ள வரையறைகள் மற்றும் எரிச்சல்களில் இருந்து வரும் வருத்தங்கள் மற்றும் போராட்டங்கள் ஆகியன செதுக்கப்பட்ட முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:2-7).*
2. *அவள் சபை கூடுகைகளில் ஆராதித்தல் மற்றும் துதித்தலின் முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:5).*
3. *அவள் தனது ஆத்துமாவை தேவனிடத்தில் ஊற்றி ஜெபிக்கையில், அவரிடம் உதவியை கெஞ்சிக் கேட்கையில் உண்மையான ஜெபத்தின் முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:9-18).*
4. *அவள் தனது வாழ்வின் நோக்கம் மற்றும் அர்த்தம் ஆகியவற்றை உணருகையில் மகிழ்ச்சி மற்றும் நிறைவு ஆகியவற்றின் முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:20).*
5. *அவள் சிறு பிள்ளையை கவனிக்கின்ற பொழுதும் அவனது தேவைகள் ஒவ்வொரு நாளும் சந்திக்கப்படுகின்ற பொழுதும் மென்மையான பாசத்தின் முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (1:22, 23).*
6. *அவள் பிள்ளையானவன் வாழ்வில் தன் வழியே போக வேண்டியிருக்கும் பொழுது, நெருங்கிய பிணைப்பு சற்றே பிரிகின்ற பொழுது பிரிதலின் துயரத்தைப் பிரதிபலிக்கின்ற முகத்தைக் கொண்டிருக்கின்றாள் (2:11).*
7. *அவள் பிள்ளையானவன் பக்குவமடைந்து உற்பத்தி செய்யும் சமூக வாழ்வில் தனது உரிமையுள்ள இடத்தை எடுத்துக் கொள்கின்ற பொழுது ஆழ்ந்த பெருமைமிக்க முகம் கொண்டிருக்கின்றாள் (2:19).*

*தாயின் பல்வேறு முகங்களில் மாபெரும் அழகு உள்ளது. இந்த அழகானது காலத்தினால் குறைவுபடுவதில்லை அல்லது சுருக்கங் களினால் அழிக்கப்படுவதில்லை அல்லது முதிர்வயதுப் புள்ளிகளி னால் மாசடைவதில்லை. பிள்ளையின் கலவரமான இதயத்தை அமைதிப்படுத்துகின்ற பிள்ளையின் புயல்களை அமர்த்துகின்ற, தைரியமிக்க பாதுகாப்பை அன்புடன் ஊட்டுகின்ற ஆறுதலூட்டும் சாந்தம் ஒன்று அவளிடத்தில் உண்டு. தாயின் பல்வேறு முகங்கள் நீண்ட காலத்திற்கு நினைவில் வைக்கப்படுகின்றன. மரணத்தில் அவள் கண்கள் மூடும் பொழுது அது நினைவில் கொள்ள வேண்டிய இன்னொரு முகமாகஃஅமைதியான ஓய்வு மற்றும் பூமிக்குரிய தல்லாத சமாதானம் என்பவற்றின் முகமாகின்றது, ஏனெனில் அந்த உறக்கமானது கர்த்தரின் கவனிப்பில் உள்ளது. அவளது அன்பார்ந்த செயல்கள் அவளை ஓய்வின் படுக்கையில் கொண்டு வந்து சேர்த் துள்ளன! தாயின் பல்வேறுபட்ட முகங்களை நினைவுகூர்வதை விட மாபெரும் ஆசீர்வாதம் வேறெதுவும் இருக்க முடியாது!*

## *எல்க்கானா, பயபக்தியுள்ள ஒரு தந்தை*
## *(1 சாமுவேல் 1:1-2:21)*

1. *இவர், தமது குடும்பத்தின் முன்பாக மார்க்க ரீதியாக வாழ்ந்த ஒரு தந்தையாக இருந்தார் (1:3).*
2. *இவர், தமது பிள்ளைகளுக்கு தேவனிடத்தில் ஒருவர் தம் வார்த்தைகளைக் காத்துக் கொள்வதன் அவசியத்தைப் போதித்த ஒரு தந்தையாய் இருந்தார் (1:21).*
3. *இவர், குடும்ப பக்தியை ஊக்கப்படுத்திய ஒரு தந்தையாய் இருந்தார் (1:4, 21).*

4. இவர், ஒரு மனைவி மீதான உண்மையான அன்பைத் தமது பிள்ளைகளுக்குச் செயல்விளக்கப்படுத்திய ஒரு தந்தையாய் இருந்தார் (1:8).
5. இவர், தமது பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய ஊழியத்தை நாடிய ஒரு தந்தையாக இருந்தார் (1:28).

## அன்னாள்: தாய்க்குலத்தின் நினைவுச் சின்னம் (1 சாமுவேல் 1:1-2:21)

1. தேவனில் கொண்டுள்ள விசுவாசத்தின் நினைவுச் சின்னம். ஐயம் மற்றும் வருத்தம் ஆகியவற்றின் பொழுது, அவள் தேவனிடம் திரும்பினாள் (1:9-18; 2:1-10).
2. சோதனைகளில் பொறுமையின் நினைவுச் சின்னம் (1:7). அன்னாள் வெகுகாலமாக மலடியாயிருந்து போராடிக் கொண்டிருந்தாள்.
3. பிள்ளைகளுக்கான ஒப்புக்கொடுத்தலின் நினைவுச் சின்னம் (1:22; 2:19). அவள் சாமுவேலின் மீது அன்புகூர்ந்து அவனைப் போஷித்தாள்.
4. தியாகத்தின் நினைவுச் சின்னம் (1:28). அவள் மதிப்புமிக்க தனது மகனைத் தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்க மனம் ஒப்பினாள்.
5. பெற்றோர்த்துவத்தின் நினைவுச் சின்னம் (1:28). அவள் தன் மகனுக்கென்றுஃஅவன் என்றென்றும் தேவனுடைய வீட்டில் வாழ்வான் என்றஃஒரே ஒரு இலக்கைக் கொண்டிருந்தாள் (1:22).

## அன்னாள்: மிகச் சிறந்த தாய்க்கான தேவனுடைய கருத்து (1 சாமுவேல் 1:1-2:21)

1. அவள் தனது பிள்ளைகளுக்காக ஊக்கத்துடனும் தேவனிடத்தில் தன் இருதயத்தை ஊற்றியும் ஜெபிக்கின்றாள் (1:10-18).
2. அவள் தனது பிள்ளைகளுடன் இருந்து அவர்களைப் போஷிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுகின்றாள் (1:21, 22).
3. அவள் தனது வாழ்வில் ஆட்சி செலுத்த ஒரே ஒரு இலக்கை - தனது பிள்ளைகள் என்றென்றும் கர்த்தருடைய வீட்டில் தங்கியிருக்கக் காணுதல் என்ற இலக்கை - கொண்டிருக்கின்றாள் (1:22ஆ, 28; 2:20).
4. அவள், தன் கருத்துக்களையும் அறிவுரைகளையும் தனது கணவர் மதிக்கும் வகையில் நடக்கின்றாள் (1:23).
5. அவள் தேவனுடைய வல்லமையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கின்றாள் (1:27; 2:1-10).
6. அவள் தனது பிள்ளைகளின் மீதான அன்பையும் ஒப்புக் கொடுத்தலையும் அறிவிப்பதற்கு சிறிய, நுட்பமான வழிகளைக் கொண்டிருக்கின்றாள் (2:19).

## கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்கள் (1 சாமுவேல் 2:1)

1. இருதயமானது நிறைவடைந்ததாக, மகிழ்ச்சியுடையதாக மற்றும் சந்தோஷம் நிறையப் பெற்றதாக இருக்கின்றது.

2. பெலமும், பாதுகாவலும் பெருக்கப் படுகின்றன.
3. தேவனற்றவர்கள் (தங்கள் சுய) நம்பிக்கையின் விளைவாக கடிந்து கொள்ளப்படுகிறார்கள்.

இந்த ஆசீர்வாதங்கள் ஏன் வருகின்றன? "கர்த்தருக்குள் இரட்சிப்பு" இருக்கின்ற காரணத்தினால் இவை வருகின்றன.

## ஏலி: சாத்தானின் மகன்களைக் கொண்டிருந்த தேவமனிதர் (1 சாமுவேல் 2:12-4:22)

இங்கு எல்லாப் பெற்றோர்களும் அஞ்சுகின்ற இருதயத்தை உடைக்கும் சூழ்நிலை உள்ளது. ஆசரிப்புக் கூடாரச் செயல்பாடுகளில் (1:4; 2:13, 14), உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றிய கண்ணோட் டத்தில் (4:3, 4; 4:13, 18அ) பிறரைப் பற்றிய பதில்செயலில் (2:16; 2:25) மற்றும் தேவனைப் பற்றிய கருத்தில் (2:17; 2:25) ஏலிக்கும் அவரது மகன்களுக்கும் இடையில் இருந்த நேரெதிர்த்தன்மைகளைக் கண்ணோக்குங்கள்.

இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை நிலவுவதற்கு இரண்டு காரணிகள் பொறுப்பு வகிப்பதாகக் காணப்படுகின்றது; அனுமதிக்கும் பெற்றோர்த்துவம் (3:13; 2:25) மற்றும் பெற்றோர்களின் வழிநடத்துதலின்றி பிள்ளைகள் தாங்களாகவே சுய முடிவுகளை மேற்கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டிருத்தல் (2:12, 17, 25; 3:13). பெற்றோர்களும் பிள்ளைகளும் தேவனுக்கு பரஸ்பரம் மதிப்பைப் பகிர்ந்து கொள்ளத் தவறுகின்ற பொழுது பயங்கரமான சேதங்கள் விளைகின்றன.

1. ஒரு குடும்பத்தின் செல்வாக்கு அழிக்கப்படுகின்றது (2:22-24).
2. போராட்டங்கள் எழும்பி வலுப்படுகின்றன (2:25).
3. தேவனுக்கான ஒரு குடும்பத்தின் ஒப்புக்கொடுத்தலானது சமரசம் செய்விக்கப்படுகின்றது (2:29). ("நீங்கள்" என்பது ஏலியையும் அவரது மகன்களையும் குறிக்கின்றது.)
4. ஒரு குடும்பத்தின் வம்சா வழி, துக்கமும் கசப்பும் நிறைந்ததாக மட்டுமே இருக்கும் (2:33; 4:13-17).

இப்படிப்பட்ட ஒரு குடும்பம் அடிக்கடி, தேவனுடைய மகிமை ஒழிந்து போகக் காரணமாகின்றது (4:19-22). தற்காலக் குடும்பங்கள் ஏலி மற்றும் அவரது மகன்களின் போராட்டத்தை எதிர்கொண்டிருப் பதைக் கவனித்தல் என்பது எவ்வளவாகக் கவலைக்குரிய விஷயமாயுள்ளது!

## தெளிவான உண்மை நிலைகள் (1 சாமுவேல் 2:13-17)

1. தேவபக்தியுள்ள பெற்றோர்களால் வளர்க்கப்படுகின்ற பிள்ளைகள் (கூட) தேவபக்தியற்றவர்களாகி விடக் கூடும் (2:12).
2. மதத்தில் நடத்துனர்களாயிருப்பவர்கள் (கூட) சுயத்திற்குத் தங்களை ஒப்புவித்தவர்களாகி விடக் கூடும் (2:15).
3. ஆராதனை நடைமுறைகள் (கூட) ஆசீர்வாதமாயிருப்பதற்கு மாறாக சாபமாகி விடக் கூடும் (2:17).

## வெட்கக்கேடான செயல்விளைவு
## *(1 சாமுவேல் 2:17)*

*ஏலியின் மகன்கள் கர்த்தருடைய பலியை பொதுவாக (மக்கள்) வெறுக்கும்படி செய்தார்கள். "மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள்." தேவனை ஆராதித்தலையும் அவருக்குக் காணிக்கை செலுத்துதலையும் பொல்லாத வழியான தாகப் பேசச் செய்வதற்கு ஒருவர் காரணமானார் என்ற கூற்றானது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது. இது எவ்வாறு செய்யப் பட்டது?*

1. *அவர்கள் சுயத்தைப் பற்றி மட்டும் அக்கறை கொண்டவர்களாக கருணையற்ற வகையில் சுய சந்தோஷத்தைத் தேடி அலைந்தார்கள்.*
2. *அவர்கள் தேவனுடைய போதனைகளை அவமதித்தார்கள்.*
3. *அவர்கள் தங்கள் தந்தையின் போதனைகளை வெறுத்து ஒதுக்கினார்கள்.*
4. *அவர்கள் தங்கள் செல்வாக்கின் செயல்விளைவுகள் என்னவாயிருந்தன என்பது பற்றி கவலைப்படாதிருந்தார்கள்.*

*வெட்கக் கேடான இதே செயல்விளைவு சாத்தியமான வகையில் நமது வாழ்விலும் காணப்படலாம். கிறிஸ்துவின் நாமமும் அவரது சபையின் நாமமும் பழி தூற்றப்படுவதற்குக் காரணமான விஷயங் களை நாம் செய்கின்றோமா அல்லது அனு மதிக்கின்றோமா? தேவனுக்குக் காணிக்கை செலுத்துதலை வெறுப்புக்குரியதாக ஆக்கியதாக நம்மீது நியாயத்தீர்ப்பின் நாளில் குற்றம் சாட்டப் பட்டால், அது எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும்!*

## "சாமுவேல் வளர்ந்தான்"
## *(1 சாமுவேல் 2:21)*

*சாமுவேலின் வளர்ச்சி பற்றிய மூன்று குறிப்புக்களில் (2:21, 26; 3:19), நாம் தேவனுக்கென்று அர்ப்பணித்தலையும் மேம்பாட்டையும் முதலில் காண்கின்றோம், எதனால்?*

1. *அவருடைய பெற்றோரின் பயிற்றுவிப்பினால்.*
2. *அவர் ஆலயத்தில் நிலையாக இருந்ததினால்.*
3. *அவர் தம் சக மனிதர் மீது கொண்டிருந்த நேர்மையான பற்றினால்.*
4. *அவருடைய தொடக்க ஆண்டுகளில் தேவனுடைய பிரமாணங்களில் போதிக்கப்பட்டிருத்தல் குறித்து அவர் கொண்டிருந்த கண்டிப்பான அக்கறையினால்.*

## ஒரு தந்தையின் ஆலோசனை இகழப்பட்டது
## *(1 சாமுவேல் 2:22-25)*

*ஏலியின் எந்தப் போதனைகள் அவரது மகன்களால் இகழப் பட்டன?*

1. *நீதியைப் பற்றிய அவரது போதனைகள் (2:22).*
2. *தேவனைப் பற்றிய அவரது போதனைகள் (2:12).*
3. *தேவனை ஆராதித்தல் பற்றிய அவரது போதனைகள் (2:13-17).*

*இவர்கள் தங்கள் தந்தையின் ஆலோசனைகளைப் புறக்கணித்த தினால் தண்டனை முன்வைக்கப்பட்டது (2:25ஆ).*

## பாவத்தை எதிர்கொள்ளுதல் (1 சாமுவேல் 2:22-25)

1. பாவம் வெளிப்படுத்தப்படும், மற்றும் எதிர்கொள்ளுதல் நடைபெறும், ஏனெனில் பாவம் என்றென்றைக்கும் மறைந்திருக்க முடியாது (2:22, 23).
2. பாவத்தைப் பற்றிய செய்தியானது விரைவாகவும் தொலைவிலும் பரவுகின்றது (2:24).
3. ஒருவர், தேவனுக்கெகிராகப் பாவம் செய்து, மனந்திரும்ப மறுக்கின்ற பொழுது, மன்னிப்பு என்பது சாத்திய மற்றதாகின்றது! நம்பிக்கை அற்றுப் போகின்றது (2:25அ).
4. எந்த எதிர்கொள்ளுதலும் இன்றி, பாவம் தொடர அனுமதிக்கப் பட்டிருந்தாலும், அது (எதிர்கொள்ளுதல்) நடக்கும் பொழுது, அது செயல்விளைவற்றதாக உள்ளது (2:25ஆ; 3:13).

## ஒரு தந்தையின் தவறுதல்கள் (1 சாமுவேல் 2:27-36)

ஒரு தந்தை என்ற வகையில் ஏலியின் தோல்வியானது, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் எவற்றைச் செய்யக் கூடாது என்று வெளிப்படுத்துகின்றது.

1. தேவனுடைய கட்டளைகளை இலேசானதாக எடுத்துக் கொள்ளாதீர்கள் (2:27-29அ).
2. கர்த்தருக்கு மேலாக பிள்ளைகளைக் கனப்படுத்தாதீர்கள்; அவர்கள் பாவஞ் செய்தால், அவர்களை நியாயப்படுத்து வதற்காக மன்னிப்பை அனுமதித்து விடாதீர்கள் (2:29ஆ).
3. ஒரு பிள்ளையின் பொல்லாத செய்கைகளுக்கு உடனாளி யாகாதீர்கள் (2:29இ).
4. உங்கள் பெற்றோர்த்துவப் பணிப்பொறுப்பை இலேசானதாக நினையாதீர்கள்; உங்கள் பிள்ளைகளை நீங்கள் பயிற்றுவிக்கும் வழிமுறையானது பலர் மீது பெரிய அளவிலான செயல் விளைவுகளைக் கொண்டிருக்கும் (2:30-36).

## தேவனுக்கு மனிதர் கணக்கொப்புவிக்க வேண்டியமை (1 சாமுவேல் 2:29)

ஏலி தமது எண்ணப்போக்குகள் மற்றும் செயல்கள் ஆகிய வற்றுக்குக் கணக்கு ஒப்புவிக்கும்படி அழைக்கப்பட்டது "ஏன்?" என்ற தீர்க்கதரிசியின் கேள்வியினால் எதிர்கொள்ளப்பட்டார். இப்படிப் பட்ட விஷயமானது எல்லா மனிதர்களுக்கும் உண்மையானதாக உள்ளது (2 கொரி. 5:10). நாம் எவற்றைக் குறித்துக் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்?

1. தேவனுடைய ஆராதனைத் திட்டங்களை ("பலி", "காணிக்கை") நாம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கிறோமா என்பது குறித்து.
2. தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முதன்மை இடத்தை (''கனத்தை'') க் கொடுக்கிறோமா என்பது குறித்து.
3. பேராசையைக் குறித்து ("கொழுக்கச் செய்தல்").

## தேவனுடைய அழைப்பிற்குப் பதில் அளித்தல்
## *(1 சாமுவேல் 3:10)*

*தேவனுடைய அழைப்பிற்குப் பின்வருவதுதான் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரே பதிலாக உள்ளது.*

1. *நமக்கான தேவனுடைய உரிமை நிறைந்த கோருதலை ("சொல்லும்") **புரிந்துணருதல்**.*
2. *நேர்மையாகக் கவனிப்பதற்கு ("கேட்கிறேன்") **மனவிருப்பம்**.*
3. *கீழ்ப்படிதலுக்கும் ஊழியம் செய்வதற்கும் ("அடியேன்") **தாழ்மை**.*

## தேவனுக்குப் பொறுமையுடன் கீழ்ப்படிதல்
## *(1 சாமுவேல் 3:18)*

1. *இது மிகவும் தாமதமாக வந்தது. ஏலியின் மகன்கள் வளர்ந்து விட்டிருந்தார்கள் மற்றும் அவர்களின் தெரிவுகள் செய்யப் பட்டிருந்தன. கீழ்ப்படிதல் என்பது முன்னரே வந்திருந்தால், அவர்களின் வாழ்வு வேறு விதமாயிருந்திருக்கும்.*
2. *இது துக்கம் மிகுந்த வகையில் வந்தது. இதன் சூழ்நிலை மிகவும் கவலைக்குரியதாயிருந்தது; இந்த முடிவு மாற்றப்பட இயலாததாக இருந்தது. ஏலி முன்னரே தேவனுக்குக் கீழ்ப் படிந்திருந்தால், அவர் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் கண்டிருப்பார்.*
3. *இது பயனற்ற வகையில் வந்தது. தேவனின்றி ஏலி தனியே இதை முயற்சித்தார். அவர் என்ன ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி விட்டார்! இப்பொழுது முற்றிலும் நம்பிக்கையற்ற நிலையில், அவர் தமது பயனற்ற தன்மையை ஒப்புக்கொண்டார். அவர் இதை முன்னரே செய்திருந்தால், ஒருவேளை அவர் நம்பிக்கை இழந்து போகாதிருந்திருக்கலாம்.*

*நாம் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மற்றும் மகிழ்வை யும் காண வேண்டுமென்றால், தேவனுக்குப் பொறுமையுடன் கீழ்ப்படிதல் என்பதை வாழ்வின் முற்பகுதியிலேயே எவ்விதத் தயக்கமும் இன்றி செயல் விளக்கப்படுத்த வேண்டும்!*

## உண்மை அழகின் இரகசியம்
## *(1 சாமுவேல் 25:3)*

*ஒப்புக் கொள்ளக் கூடிய வகையில் அபிகாயில் அழகியா யிருந்தாள். இவள் உள்ளாகவும் அழகு மிக்கவளாயிருந்தாள்.*

1. *அபிகாயில் ஏன் அழகாயிருந்தாள் என்பதை (பின்வரும்) ஒரு காரணம் விளக்குகின்றது: இவளது விசுவாசம்!*
2. *அபிகாயிலின் விசுவாசத்தினால், இவளது வெளிச்சமான நிலைப்பாட்டிலும் மகிழ்பொங்கும் பிரசன்னத்திலும், எரிச்சலும் கோபமும் கொண்டுள்ளவரை அமைதிப் படுத்துவதிலும் இவளது அழகு காணப்பட்டது.*
3. *இந்த குணங்களினால், இவள் தான் தொடர்பு கொண்டிருந்த யாவருக்கும் உண்மையான ஆசீர்வாதமாயிருந்தாள் (25:32).*

*உள்ளான அழகு என்பது தேவபக்தியுள்ள பெண், தன் வாழ்வில் தேவனுடைய*

*நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவளாயிருக்கச் செய்யும். அவள் உண்மை அழகின் இரகசியத்தைக் கண்டறிவாள்.*

## *கோபத்தைத் தீர்த்தல்*
## *(1 சாமுவேல் 25:24-31)*

*தாவீது மிகவும் கோபமாயிருந்தார். அவர் மறுசெயல் செய்யப் போகும் நிலையில் இருந்தார். அப்படிப்பட்ட கோபத்தைத் தீர்த்து வைக்க ஒரு பெண் என்ன கூற அல்லது என்ன செய்ய இயலும்? அபிகாயில் நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றாள்,*

1. *கோபமுள்ள மனிதர்களைத் தாழ்மையுடன் அணுகுங்கள் (25:24).*
2. *உங்கள் தவறுகளை ஒப்புக்கொண்டு புண்படுதலுக்கான தனிப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ளுங்கள் (25:28).*
3. *தேவனை (உங்கள்) விஷயத்திற்குள் கொண்டு வாருங்கள் (25:29-31).*
4. *மன்னிப்பை அருளுடன் ஏற்றுக் கொள்ளுங்கள் (25:32, 33).*
5. *செய்தித் தொடர்பு கொள்வதற்கு வார்த்தைகளைத் தெளிவாகப் பயன்படுத்துங்கள், மற்றும் கவனத்துடன் கேளுங்கள் (25:24, 35).*

## *சாமுவேல்: அர்ப்பணிப்பின் விவரிப்பு*

*சாமுவேலைப் பற்றிய எடுத்துரைப்பானது, தேவனுக்கென்று அர்ப்பணித்தல் மற்றும் ஒப்புக்கொடுத்தலின் முறிபடாத வரலாறாக உள்ளது. அவர் (தன் தாயின்) கர்ப்பத்தில் தோன்றிய நாள் முதல் அவருடைய பூமிக்குரிய கல்லறையில் நிரப்பப்பட்ட நாள் வரைக்கும் அவர் அர்ப்பணிப்பின் மனிதராக விளங்கினார்.*

1. *அவர் தனது இளம் பருவத்தில் ஆவலுடன் இருந்தார் (2:11, 18-21; 3:1-21).*
2. *அவர் தனது வயது காலத்தில் பின்மாற்றம் இல்லாதவராக இருந்தார் (7:1-17).*
3. *அவர் தனது பொன் ஆண்டுகளில் நிறைவுற்றவராக இருந்தார் (8:1 முதல்; 9:15-10:25; 12:1-25).*
4. *அவர் தனது மரணத்தில் வெகுமதி பெற்றார் (25:1; 28:12-19).*

*அவருடைய வாழ்க்கை வரலாறானது, எல்லாக் காலங்களிலும் இருக்கின்ற தேவனைப் பின்பற்றுபவர்கள் யாவரும் அர்ப்பணிப்பில் நிலைத்திருக்கும்படி அறைகூவல் விடுக்கின்றது.*